செ.வெ.எண்: 788 நாள்: 16.11.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் மாவட்ட அளவிலான மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட உள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் மாவட்ட அளவிலான மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட உள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி. இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் 2019-20 ஆம் ஆண்டுக்கான ஆகஸ்ட் மாத மாவட்ட அளவிலான மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள் 19.11.2019 அன்று புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்க திடலில் தடகளம், பளுதூக்குதல், கூடைப்பந்து மற்றும் நீச்சல் விளையாட்டுகளில் வீரர் மற்றும் வீராங்கனைகள் இருபாலருக்கும் கீழ்க்காணும் நிகழ்வுகளில் நடத்தப்படவுள்ளது.

இதன்படி தடகள விளையாட்டுப் போட்டிகள் சிறுவர் மற்றும் சிறுமியர்க்கு 100மீ, 400மீ, 1500மீ, நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், குண்டு எறிதல் மற்றும் தட்டு எறிதல் ஆகிய விளையாட்டு நிகழ்வுகளிலும், பளுதூக்குதல் மற்றும் கூடைப்பந்து குழு விளையாட்டுப் போட்டிகள் வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கும் நீச்சல் விளையாட்டுப் போட்டிகள் வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கும் 50மீ Free style, 100மீ Free style, 200மீ Free style, 400மீ Free style, 50மீ Breast Stroke, 50மீ Back stroke, 50மீ Butterfly மற்றும் 200மீ IM ஆகிய விளையாட்டு நிகழ்வுகளில் நடத்தப்படவுள்ளது.

போட்டிகளில் கலந்து கொள்ள வயது வரம்பு கிடையாது. தடகளம் மற்றும் நீச்சல் விளையாட்டுப் போட்டிகளில் ஒருவர் ஒரு விளையாட்டு நிகழ்வில் மட்டுமே கலந்து கொள்ளலாம். ஆகஸ்ட் 2019 ஆம் மாத மாதாந்திர போட்டிகளில் கலந்து

கொள்ள விருப்பமுள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் 19.11.2019 அன்று காலை 8 மணிக்கு மாவட்ட விளையாட்டரங்கத்திற்கு வந்து, புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலரிடம் தங்களது பெயரினை பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி. இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---------------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**